எமது செல்வ மகனின் நினைவாக

# சரவண பவ

# ஓம்

# சண்முகா

"அன்னையும் தந்தையும் தானே – பாரிஸ்
அண்ட சராசரம் கண்கண்ட தெய்வம்"

*அமரர்*


## ராஜகாந்தன் ரஜனிகாந்

| | |
|---|---|
| ஈழமண்ணில் | அகதி மண்ணில் |
| **08.04.1977** | **05.05.1998** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**RAJANIKANTH**



# ராஜகாந்தன் ரஜன்

தன்நிலை தாழாமையும்
அந்நிலை தாழ்ந்தற்கால்
உயிர் வாழாமையும்
மானம் எனப்படும்
ஈழ மகனின் கல்வி எனப்படுவதும்
தமிழனின் தன்மான சிறப்புகளில் ஒன்றுதானே!..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வனின் 21 வருட வாழ்க்கையில்

ஈழவள நாட்டின் வடபகுதியில் தெல்லிப்பழை அம்பனையைச் சேர்ந்த காலம் சென்ற பொன்னையா, பொன்னம்மாவின் அருமை மகனான பிரபல விளையாட்டு வீரரும் விளையாட்டுக்களின் மத்தியஸ்தருமாகிய திரு. ராஜகாந்தன் அவர்களுக்கும், தெல்லிப்பழை விராங்கொடையைச் சேர்ந்த காலம் சென்ற கனகநாயகம், சரசோதிமாலையின் சிரேஷ்ட புத்திரி கனகராணிக்கும் 1977ம் ஆண்டு சித்திரை 8ம் நாள் மூத்த புத்திரனாக செல்வன் ரஜனிகாந்த அவதரித்தார். பெற்றோருக்கு அன்பு மகனாகவும் அன்னையின் சகோதரர்களின் ஆசை மகனாகவும், அப்பப்பா அப்பம்மா பாட்டாவிற்கு குலக்கொழுந்தாகவும், மாமிமாரின் ஆசை மருமகனாகவும், யாவரின் முதல் செல்லப்பிள்ளையாகவும் வளர்ந்து வந்தான். 1979ம் ஆண்டு அவருக்கு துணையாக அன்புத்தம்பி அஷோக்காந் பிறந்தார். இருவரும் முத்துக்கு முத்தாக சொத்திற்கு சொத்தாக வளர்ந்து வந்தார்கள். இவர் ஆறு வயது வரை தெல்லிப்பழை கயந்தப்பையில் அயலவர்களின் செல்லப்பிள்ளையாக தம்பியுடன் வளர்ந்தார். அப்போது அருகில் உள்ள பாலர் பாடசாலையிலே செய்த திறமைகளும் போட்ட வேஷங்களும் என்றும் மனதைவிட்டு அகலாதவை.

1983ம் ஆண்டு பெற்றோர்களின் இடம்பெயர்வையடுத்து சொந்த பந்தங்களைப் பிரிந்து பாரிஸில் (Paris) வாழத்தொடங்கினார். சிறுவயது முதல் கல்வியில் மிகச் சிறந்து விளங்கிய இவர் உதைபந்தாட்டம், நீச்சல் போன்ற விளையாட்டுக்களில் ஆர்வமும் திறமையும் கொண்டு நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியாக வளர்ந்து வந்தார்.

அமரர் ரஜன் தம்பியின் பிரியமுள்ள அண்ணாவாகவும் யாவரின் மதிப்பிற்குரியவராகவும் வாழ்ந்திருந்தார். 1992ம் ஆண்டு அவர் செல்மாக யோயோ என அழைக்கும் ஜோயல்காந்திற்கு அண்ணாகும் பேறுபெற்றார். குட்டித்தம்பியின் சுட்டித்தனங்களையும் மழலைச் சொற்களையும் கேட்டு அளவிலா ஆனந்தம் அடைந்தார். பெற்றோர்கள் மூவரையும் எவ்வித குறையுமின்றி அன்புடன் வளர்த்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த அழகும், கம்பீரமான தோற்றமும் சகல நற்குணங்களும் கொண்ட ரஜனிடம் பொறுமை மிகவும் குறைவு, எதிலும் அவசரமும் துடிப்பும் நிறைந்த இளைஞனாகவே வளர்ந்து வந்தான். தனது 14வது வயதில் இருந்து தனியார் பாடசாலையில் கல்வியை தொடர்ந்தார். செல்லப்பிள்ளையான இவர் எல்லா வகுப்புகளிலும் சிறந்த தேர்வுகளைப் பெற்றிருந்தார். பிரெஞ்சு மாணவர்கள் ஆசிரியர்களே பிரமிக்கின்ற மாதிரி அவரின் மதிப்பெண்கள் மிகவும் திறமையாக காணப்பட்டன. இவருக்கு ஏழைகளுக்கும் தன் நண்பர்களுக்கும் கூடப்பிறவாத சகோதரர்களுக்கும் கற்பிப்பதில் மிகவும் அக்கறையுள்ளவர். இவர் எதையும் ஒளிவு மறைவில்லாமல் நேருக்குநேர் கதைக்கும், பழகும் குணம் கொண்டவர். ஆனாலும் தன்மானச்செருக்குக் கொண்ட மானஸ்தனாகவே கடைசிவரை வாழ்ந்து வந்தார்.

1997ம் ஆண்டு பிரெஞ்சு அரசதேர்வான BAC [இலங்கையின் க.பொ.த. உயர்தரம்] பரீட்சையில் தேர்வு பெற்றிருந்தார். அதே ஆண்டில் தம்பி அஷோக்காந்தும் தேர்வு பெற்றிருந்தார். பெற்றோர்களுடனும் தம்பிமாருடனும் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றுவிட்டார். உறவினர், நண்பர்கள், பெற்றோரின் நண்பர்களின் ஆசீர்வாதங்கள், பாராட்டுக்கள் பரிசுகளுடன் அண்ணனும் தம்பியும் உயர்படிப்புக்காக பல்கலைக்கழகம் புகுந்தனர். பெற்றோர்கள் அளவற்ற மகிழ்ச்சியடைந்தனர். 1997ம் ஆண்டு புரட்டாதி மாதம் சட்டப்படிப்பிற்காக பல்கலைக்கழகம் சென்றவர், கார்த்திகை மாதம் வந்த இரண்டு கிழமை விடுமுறையைக் கழிக்க நண்பர்களோடு சுற்றுலா போனபோது மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் ஏற்பட்ட காயத்தினாலும் ஏற்பட்ட உடல் தாக்கத்தினாலும் பாதிக்கப்பட்டதின் விளைவு நாளடைவில் வைத்திய ஆலோசனையின் பேரில் தன் உயர்படிப்பை இடைநிறுத்த வேண்டியவரானார். படிப்பைத் தன் உயிராக நினைத்திருந்த அவரிற்கு இதனால் ஏற்பட்ட மனத்தாக்கம், தனது 21வது வயதினிலே வைகாசி மாதம் 5ம் நாள் தனது இன்னுயிரை மாய்த்துக் கொண்ட அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் துடிப்பில்

பெற்றவர் குலம் விளங்க
பிள்ளையாய் வந்தானென்று
சுற்றத்தை சொல்ல வைத்து
சுகமெமக் களித்த ரஜன்
சுற்றத்தார் எம்மோடேங்க
சொல்லாமல் போனாயேடா
மம்மி என்றும் டாடி என்றும்
மனம் நிறைய அழைத்தவனே
இம்மிப் பொழுதினிலே ஏமாந்த வேளையிலே
எமை ஏங்க விட்டுப் போனாயேடா
வேலைக்கு கூட வந்தென்
வேலையில் உதவியதுன்
வேளை வந்ததென்று மகனே
வெளிக்காட்ட எண்ணித்தானோ
கல்விமேற் காதல் கொண்டு
கருத்துடன் கல்வி கற்க - ஏற்கா
காலனே இடையில் வந்து
கல்வியைத் தடுத்தானோடா
நான் கற்று முடித்தபின்னே
நல்லதோர் வேலைக்குப் போய் - வாழ்
நாள் முற்றும் அருகிருத்தி
நலமுடன் காத்திருப்பேன்
என்றெல்லாம் இனியகூறி
எல்லையற்றின் பம் தந்தாய்
எங்கள் உயிரில் மலர்ந்த உயிரே
இரவு விடிந்தாலும் நிலவு விண்ணோடுதான்
இலை உதிர்ந்தாலும் மரம் மண்ணோடு தான்
எம் காதல் காவியம் சொல்ல வந்த முத்தே
உன்னுடல் மறைந்தாலும் உயிர் எம்முடன் - தான்
நாம் மடியும் வரை நீ எம்மோடு தான்
வாழுகின்றாய் மகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர் துடிப்பில்

எம் பிறந்த தினம் முதலாய்
எம் அருகிருந்த அண்ணா
எம்மைவிட்டு போனதினால் இனி
எமக்கு ஆரோ அண்ணா
கல்வியில் விளையாட்டில் எமக்கு
நல்லதோர் துணையிருந்த
கள்ளம் கபடமற்ற நல்ல
உள்ளம் எம் அண்ணா நீயே
நல்லஉனை நாம் இழந்து
நட்டாற்றில் வீழ்ந்து விட்டோம்
பெற்றோர் வெளியே போனால் வீட்டில்
பொத்தி எமைக் காத்தவனே
குற்றம் என்ன செய்தோம் - உறவு
உற்ற எம்மை நீங்க
எங்களுக்கு கல்வியிலே இடையில்
எழும் சந்தேகங்களை
எளிதாக விளக்கி எம்மை
தெளிவாக வைத்தவனே - எம்
உள்ளத்து உணர்வுகளை அறியாயே
உள்ளே அழுவதை நீ காணாயோ
உருளும் உலகத்தில் அண்ணா என்றும்
உன் நினைவுதான் மாறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பம்மாவின் ஏக்கம்

ஆறு வயது வருமட்டும் என்
அருகிருந்த என்ராசா

வருட விடுமுறைக்கு
வருகின்ற ஆவணிக்கு

வருவேன் நான் ஊருக்கு
வந்துன்னை பார்த்திடுவேன்

என்று எனக்குரைத்த
என் அருமைப் பேரா நீ

என்னை வந்து பாராமல் - உன்
முகத்தைக் காட்டாமல்

என்னை விட்டுப் போனாயோ எமன்
அழைத்துப் போனானோ

எங்கள் குலக்கொழுந்தே முத்தான
என் ராசகுலமே - பாட்டி

நான் இங்கிருக்க என்னைப்
பார்க்காமல் போனாயோ

பாட்டி நான் காவோலை - பேரன்
என் குருத்தோலை

காவோலை காத்திருக்க குருத்தோலை கருகியதோ

எனக்கு கொள்ளியிட இருந்த

உன் அப்பன் உனக்கு கொள்ளியிட

எமன் வந்து சேர்ந்தானோ

பேரா உனைப்பார்க்க

பின்னாலே வருவேன் நான்

பின்னால் வரும் வரைக்கும்

உன் நினைவில் வாழ்ந்திடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mon grand frère, Anna,

Voilà bientôt un an que tu nous a quitté, et moi ton petit frère ,j'ai l'impression que c' était hier, tant tu es présent dans nos coeurs à tous!
Pourquoi nous as-tu quitté?
Tu as une Maman formidable qui aurait donné corps et âme pour te rendre heureux. Et aujourd'hui elle a le coeur meurtri de ton absence mais garde sa raison de vivre pour ses deux enfants.
Tu as ton petit frère Joëlkanth qui est ta réincarnation même : il a ton intelligence, ta beauté, ta fougue, ton énergie et bien d'autres de tes qualités, mais aussi tes défauts .Cependant je me suis promis que je l'empêcherais d'avoir tes défauts les plus grands, comme notamment ta grande impulsivité. Il aurait voulu tellement garder ses deux frères toute sa vie.
Tu as Papa qui ne nous a jamais réellement montré son amour paternel sous ses humeurs grincheuses. Mais je peux te dire une chose c'est que aujourd'hui il est le papa le plus malheureux du monde, il s'en veut beaucoup de ne t'avoir montré à quel point il te chérissait.
Et moi, je suis horriblement triste car j'aurai tellement voulu qu'on soit de grands amis et qu'on partage beaucoup de moments complices et fraternels, ce qu'on bien commencé.

Mais voilà un beau jour de printemps, tu as décidé de nous quitté pour aller rejoindre le monde des petits anges.
Aujourd'hui même si chaque jour on verse nos larmes et qu'on se demande pourquoi tu es parti sans même expliquer, on espère simplement que tu es heureux là ou tu es, que tu n' arrêtes pas d' avoir des fous rires tellement ta vie actuelle, je suis sûr, est une montagne de bonheur et de joie. Tu le mérites sincèrement!
Enfin ne nous oublies pas !
Anna, veille chaque jour qui passe sur Maman, Papa et ton frère. Ils ont besoin d'un ange comme toi.
Pour moi ne t` inquiète pas, tu demeures dans mon coeur à jamais. Et cela me donne une grande force!

A bientôt, Anna, dans une autre vie!
Ton frère bien aimé

Ashokanth Rajakanthan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிற்றன்னைமாரின் கதறல்

*இனி மேல்*

*எப்போதும் காணவே முடியாத*

*எங்கள் குடும்பத்துத் தலைமகனே - உன்னை*

*பெற்றவளின் சோதரிகள் - உனக்கு*

*போடுகின்ற பூக்கள் இவை*

*அஞ்சலிப் பூக்கள் இவை*

ஆனந்த உறவெங்கள்
அக்காவின் மகனின்று
குடும்பத்து விளக்கே – நீ
குத்து விளக்கானாயோ.
மூத்தக்காள் வயிற்றினிலே
முதல் மகனாய் வரும்வரையும்
காத்துக் கிடந்தோமே
கணநேரப் பொறுமையின்றி

பிறந்ததை நினைத்தக்கால்
பேருவகை கொண்டோமே – நீ
பிறந்ததை நினைத்தக்கால் நாம்
பேருவகை கொண்டோமே
துள்ளிக் குதிக்கையிலே
அள்ளி அணைத்தோமே – நீ
தவழ்ந்த போ தெல்லாம் – நாம்
தவழ்ந்து மகிழ்ந்தோமே.

பஞ்சு மலர்ப் பாதமவை
கொஞ்சமும் நோகாமல்
தோள் மேலே தூக்கியதும்
தொட்டிலிட்டு ஆட்டியதும்
வாய் பொத்திச் சிரிக்க வென்று
வேடிக்கை காட்டியதும்
கையிருந்து கீழிறங்கி – நாம
கண மூடித் திறக்குமுன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி வழி நீயோட
விரட்டி நாம் பிடித்ததெல்லாம்
நினைவில் வருகையிலோ
நெஞ்சமது கலங்குதய்யோ
மூவேழு வருடங்கள்
முன்னே நடந்ததெல்லாம்
நீ மறைந்த பின்னாலும்
நெஞ்சில் வருகுதடா

இடையில் சில காலம்
எமைவிட்டு இங்கு வந்தாய்
இருந்தும் தாளாமல
இங்கேயும் சேர்ந்தோமே.
நாட்டு நிலை நலிவடைய
நம் தமிழர் வழிமாற
நாற் புறமும் சிதைபட்டு
மேற்குலுகு வந்ததிலே
மொழியும் புரியாமல்
மிகவும் சிரமத்தில்

வழியும் தடுமாறி
வாழவுமது வேதனையில
வாழ வந்த நாட்டினிலே
வழியதனைக் கண்டவன் நீ.
மொழியைப் புரியாமல்
முற்றாய் முடியாமல்
வழியில் தடுமாறி – கல்வி
விட்டு விடும் மாணவரில

நானும் ஒன்றல்ல
நிச்சயமாய் வேறென்றாய்
கல்விதான் தமிழனுக்கு
கண்ணின் மணிஎன்று – தாய
சொல்லிப் புரிந்ததனால்
சிந்தையில் உரமாகி
பிரஞ்சுமொழிக் கல்விதனை
பிரியமாய் கற்றவனே

பக் (BAC) என்று சொல்லுகின்ற
பிரஞ்க் கல்வியினை
சிக்கென்று தான் பற்றி
சீராக அதைத் தாண்ட
வர்த்தகப் பிரிவினிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகம் புரியவென்று
பல்கலைக் கழகமுன்னை
நல்லபடி அழைத்த துவோ

பல்கலைக் கழகத்தில்
பல்கலையும் கற்றிடுவான்
பாரினில் ஒளிர்ந்திடுவான்
பகலவனைப் போலிருப்பான்
குலப் பெருமை விளங்கவைதது
குடும்பத்தை காத்திடுவான்
உடன் பிறவாச் சோதரங்கள்
உயர்கல்வி கற்பதற்கு

நீயே வழிகாட்டி – என
நினைத்தோம் மகிழ்கூட்டி
உயர் கல்வி கற்பதற்கு
உனக் கழைப்பு வந்தக்கால்
உவகையது கொண்டவர் நாம் – அந்த
உயரமே எமனென்று
உணராமல் போனோமே
உதவாமல் போனோமே

உன்குடும்பம் கல்வியினால்
உயர் கொள்ளும் நிலைகண்டு
ஊரே பேசுகையில் – மகனே
உன் உயிரும் போயாச்சே
பிரிவுக்குப் பரிவாகி
பின்னாலே கதைபேசும்
கதிகெட்ட சில பேரின்
கணைகளையும் பாராயோ

இன்னும் சில காலில்
இனியதோர் நன்னாளில்
மணம் புரிவாய் என்றிருந்தோம்
மரணிப்பாய் எனறிலலை.

உங்களுக் காய் ஓடோடி
உழைத்து ஓயாமல
பணத்தைச் சேர்த்தும்மை
படிப்பித்த தந்தையினை

கணத்தில் மறந்தாயோ
கண்ணீரில் விட்டாயோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவற்றை எப்போதும்
கிரமமாய் வாங்கி வந்து
வீட்டில் உமை வளர்த்து
வெற்றிக்கு தான் உழைத்து
மட்டற்ற மகிழச்சி தந்த – உன
மாதாவை மறந்தாயோ.

அண்ணா என்றழைத்து
அருகிருப்பான எப்போதும்
அன்புத் தம்பியவன்
அசோக்கை மறந்தாயோ?
சின்னத் தம்பியவன்
சிங்கார பையனென்று – நீ
ஜோராக உறவாடும்
உன் ஜோகலனையும் மறந்தாயோ

தம்பி உடையான்
படைக்கஞ்சான் என்பார்கள்
படையை மறந்து விட்டு
பாடையிலே போனாயோ
அன்ரா என்றழைத்து
அன்பாக உறவாடும்
எங்கள் முதல் மகனே – நீ
எங்களை ஏன் மறந்தாய்

ரத்தத்து உறவென்றும்
ரத்தினமே நீ என்றும்
ரஜன் எனறும் நாமழைதத
ரஜனிகாந்த் இன்றில்லை.
இனிமேல் அழைபபதற்கு
இல்லை நீ எனறாலும்
இனியவனே அழியவில்லை
எம் நெஞ்சில் இருக்கின்றாய்.

கண்ணின் மணியுன்னை
கண்ணீரால் கழுவுகின்றோம்
சிந்தை கலங்குகிற
சிற்றன்னை மாருடைய
இதயத்தின் ஆழத்தில்
இருந்தெங்கள் அஞ்சலிகள்.

*ஆக்கம்: திருமதி. துஷியந்தி எழில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமிமாரின் சலிப்பில்

எம் செல்வக் களஞ்சியமே அழகு மருமகனே!
வாசம் பரப்பவந்த எமது வண்ணைக்குலக் கொழுந்தே
நேசம் தனை மறந்து நீண்ட தூரம் சென்றதெங்கே
பாசம் என்னும் ஆழ்கடலில் உன் அன்பு
மைத்துனரோடு சிக்கித் தவிக்கின்றோம்
நேசமுடன் உன்நினைவால் நித்தம் அழைக்கின்றோம்
உன்முடிவு உனக்குத்தான் நிம்மதி
எமக்கெல்லாம் என்றுமே வற்றாத கண்ணீர்க் கடலய்யா.

உன் பெரிய மாமி
திருமதி. உருக்குமணிதேவி
இரத்தினேஸ்வரன்.

## நீங்காத நினைவலைகள்

எங்கள் அன்புச் செல்வமே. எங்கள் குடும்பத்தில் முதல் வந்த குல விளக்கே, ஓராண்டல்ல பலநூறு ஆண்டுகள் ஆனாலும் மறப்போமா உன்னையையா. அழகான உன்னுருவம் என் நெஞ்சில் அகலாமல் இருக்குதையா. அன்பான உன் மொழிகள் என் உள்ளத்தில் அலையாகப் பொங்குதையா. ஓடி ஆடித்திரிந்த உன்னை அடக்க நினைத்தது ஆண்டவன் சதியையா. என் மகனே நீ பல்கலைக்கழகப் பட்டம் பெறுவாயென நாங்கள் எண்ணியிருந்தோமையா. ஆனால் பாதியிலே உதறிவிட்டு எம்மையெல்லாம் துடிக்கவிட்டுச் செல்ல எப்படி மனம் வந்ததையா. மனம் நிறைந்த நினைவுடனே உனது மணக்கோலம் காணக்காத்திருந்தோமையா, காலன் செய்த சதியாலே உனது மரணச் செய்திகேட்டு சிலையாக நின்றோமையா. உன்னைப் பெற்றவர்கள் உன் பிரிவால் புலம்புகின்றார், துடிக்கின்றார். அவர்களை விட்டுப்பிரிய எப்படித்தான் மனம் வந்ததையா. எம்மையெல்லாம் விட்டு எங்கு நீ சென்றாயையா? உன் அன்பு முகம் பாராமல் நாம் கலங்குகின்றோம், தேடுகின்றோம். மீண்டும் ஒரு பிறப்பெடுத்து எம்முடனே வந்திடையா உன் நினைவை என் இதயம் ஆயுள் சோகமாய் அல்லவா சுமந்துவிட்டது.

உனது ஆன்மா இறைவனோடு கலந்து இளைப்பாற இறைவனின் பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
பூஅன்ரி (சிவபூபதி - நந்தகுமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பா மாமாரின் புலம்பல்

தன் நிலை தாளாதிருந்த மகன்
அந்நிலை தாழ்ந்தக் கால் - உயிர்
வாளாதிருக்க எண்ணி எம்மை
மாளாது துயரிருத்திப் போனானே.

சிரித்துப்பேசி எங்கள் சிந்தனையில்
நின்ற மகன்
சித்தப்பா என்றழைத் தெம்
சிந்தை கவர்ந்த அவன்
உரத்துப் பேசாது நல் உவமையாய்
நின்ற அவன்
உடன் பிறவா உறவுகளை
உயிராய் மதித்திருந்த
உயர்ந்த பண்பொன்று
உரமாச்சே மண்ணுக்கு
உதிரம் கொதிக்கிறதே உள்
மனசும் துடிக்கிறதே
இனிமேல் இதுபோல்
இழப்பொன்றும் வேண்டாமே.

# தேற்றம்

நீர்குமிழி போலாகும் நீணிலகில் இவ்வாழ்வு
யார்க்கும் நிலை யில்லை யென்றறிந்தே ஊக்குரைத்தார்
மெஞ்ஞானி பல்லோர்கள் மேலிரங்கேல் நன்மனமே
உய்வழியே போவோமென் றேது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

# திருவலிவலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த

# தேவாரப் பதிகங்கள்

திருவதிகை வீரட்டானம் பண்–கொள்ளி

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர்
கொடுமைபலசெய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கேயிரவும் பகலும்
பிரியாதுவணங்குவனெப் பொழுதும்
தோற்றாதென்வயிற்றின கம்படியே
குடரோடுதுடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன் திகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்: காந்தாரம் தாளம்: ரூபகம்

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளோடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடுப டாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

**திருவாசகம்**

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலை புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்(கு) எழுந் தருளுவ(து) இனியே.

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிர என் கண்குளிர்ந் தனவே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனோடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றி பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

ராகம்: நவரோஜ் தாளம்: ஆதி

பக்தியால் யானுனைப்பலகாலும்–பற்றி யேமாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்–முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தான சற்குண நேயா–ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநிபாதா–வெற்றி வேலாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதியந்தாதி

காப்பு

ஆயகலைக ளறுபத்து நான்கினையும்
மேய வுணர்விக்கு மென்னம்மை – தூய
வுருப்பளிங்கு போல்வாயென் னுள்ளத்தினுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் – துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாள்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

திருச்சிற்றம்பலம்

## சகலகலாவல்லிமாலை

வெண்பா

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் – வெள்ளை
அரியா சனத்தில் அரசரே டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்.

வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியேய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலுந்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்ன
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாடும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பார்
கூட்டும் படிநின் கடைக்கனல்கா
யுள்ளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலாவல்லியே

சொல்விற் பனமுமவ தானமுங்
கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தத் தடிமைகொள்வாய்
நளினா சனஞ்சேர்
செல்விக் கிதன்றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்க
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற்பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

–குமரகுருபரர்.

திருச்சிற்றம்பலம்

*வாழ்த்து*

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
கசிந்துருகி நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்
நின்னஞ்செழுத்தைச் சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

ஈழமண்ணில்
08.04.1977



புகலிட மண்ணில்
05.05.1998

## இராஜகாந்தன் ரஜனிகாந்த்

(தெல்லிப்பளை விராங்கொடை)

*நல்ல மகனே*
*நகையரும்பும் பிள்ளை மனமே*
*கள்ளமில்லா வெள்ளை மனமே*
*தேனுறைந்த பாலினைப்போல்*
*தித்தித்த நற்பிறப்பே ரஜனிகாந்தே*
*உன் பிரிவால் துயருறுகின்றார்–எங்கள்*
*கலைக்கோயில் கலைஞரெல்லாம்*

*உதிரமெல்லாம் உறையுதடா*
*சதிரமெல்லாம் நடுநடுங்குதடா*
*உன்னைப் பிரிந்த நாள்முதலாய்*
*வெள்ளமாய் கண் சொரியுதடா*
*காலன் கைபோங்கும் வயதாடா மகனே!*
*அழகையும் அறிவையும் எழுதி வைத்தவன்*
*இத்தேதியில் ஆயுளை முடித்ததேனடா?*
*தலையில் எழுதியதை நாங்கள் அறியவில்லையே*
*சீவன் இருக்கையில் சிந்திய சிரிப்போல்*
*அடிக்கடி நெஞ்சினை நெருடுதடா மகனே*
*உன்னைப்பெற்ற தாய்தந்தை கலைஞரை*
*மதித்துப் போற்றுவதாலே கலைக்கோயில்*
*கலைஞரிடையும் பெருங்கவலை சூழ்ந்ததடா*
*பிடிக்க வந்த எமனுக்கு பிள்ளைப்பாசம்*
*தெரியவில்லையே பிள்ளைபோல் பிள்ளை*
*அவனுக்கில்லையே மோசம் செய்தானே*
*மகவளமே ரஜனிகாந்தா ரஜனிகாந்தா*
*எழுந்துவாடா செந்தமிழ் சிரிப்பின் தொனி*
*சிந்திடச் சிந்திட எழுந்து வாடா மகனே*

பாரிஸ்
கலைக்கோயில்
18.04.1998

கண்ணீர்பூக்களால் அஞ்சலிக்கும்

கலைக்கோயில் கலைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞனின் கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
08.04.1977

இறப்பு
05 05 1998

## இராஜகாந்தன் ரஜனிகாந்த்


(தெல்லிப்பளை விராங்கொடை)

எழுத்தினால் தங்கத்தமிழ் பேச்சினால்
எம் மகனே உன்னை எண்ணியே அழுகிறோம்
நான் எழுதும் கன்னித்தமிழும் கைகூடல்லையே
நயமான பாடல்போற்றும் கவிதை எழுதிடவே!
மெத்தப் படிக்க எண்ணியோ ரஜனிகாந்த்
சித்தம் கலங்கி நித்தமே எமைவிட்டுப் பிரிந்தாய்!
படிப்பை எண்ணிய நீ ஏன் தனிமையை நாடினாய்
உயர்வான எண்ணத்தில் ஏன் மகனே மண் போட்டாய்?
பொறுமையின் பெருமை உணரா உணர்வாலோ?
வற்றாத கண்ணீரில் மிதக்கவிட்டு போனாயடா?
கன்றை இழந்தோர் தாயின் புலம்பலும் புலம்பலும்
கண்ணீரில் கண்ணீரில் மாறாத துன்பத்தில் மாழ்ந்ததடா
நித்தம் நித்தம் எங்கள் நெஞ்சேறி நெஞ்சேறி
தத்தித் தத்தித் நடைபயின்ற மகனே ரஜனிகாந்தா
புத்தம் புதிய புன்னகை சிந்தித் தினம் வருவாயே
எங்கே உனக்குரிய கள்ளமில்லாச் சிரிப்பைத் தொலைத்தாய்?
பரவலன் நானும் புலம்புகின்றேன் புலம்பலும்
கவிதையின் ஜீவநாடியை இழந்தாலே ரஜனிகாந்த்
குருதி ஊற்றே குமுறுகின்றது சதிரம் நடுங்குகின்றது
கவிதை ஊற்றுத் தந்த சத்தத்தை மறந்ததாலே. . . .
எங்கள் மன்னவனே எங்கள் குல மூத்தவனே
ஏற்றிய விளக்கின் எண்ணெய் குறையுமுன்னம்
போற்றிய எங்கள் குலப்பெருமை விளங்க வந்திடு
அம்மா, அப்பா சொந்தங்கள் அரவணைக்கும்
முத்த மொழி பாடி வந்துவிடு வந்துவிடு மகனே
பாசத்தின் முடிவை துன்பமாக்கியவனே
மோசத்தின் முடிவை எய்திவிட்டவனே
அழுகையின் முடிவை நிறுத்திட நிறுத்திட
பைந்தமிழ் பாஇதழ் திறந்து பேசிடப் பேசிட
திரும்பும் திசையெங்கும் மோதி மோதி
எதிரொலிக்கா நிலைமாற்றிட வந்திடு
வேகும் பொன்னுடல் ஒருபிடி சாம்பல்
ஆகும் நிலைகண்டு ஓலம் ஒலிக்குமுன்
வந்திடு வந்திடு எங்கள் மன்னவனே
ரஜனிகாந்த்! ரஜனிகாந்த்!! ரஜனிகாந்த்!!!

மா.கி.கிறிஸ்ரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வன் ரஜனிகாந்தின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் உயிராய் உடலாய்
உணர்வாய் விளங்கிய அன்பு மகன்
ரஜினிகாந்தின் இறுதி முடிவறிந்து, ஓடிவந்து
உதவியவர்களுக்கும் எங்கள் வீட்டுக்கு நேரில்
வந்து துயரில் பங்கேற்று எம்மைத்
தேற்றியோருக்கும், உள்நாட்டிலும்
வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி தந்திகள்,
கடிதமூலம் அனுதாபச் செய்திகளை
அனுப்பியும், மலர் வளையங்கள் வைத்து
அஞ்சலி செலுத்தி இறுதிச் சடங்குகளில்
கண்ணீர் அஞ்சலிக் கவிதைகளை வாசித்து
பங்குபற்றியவர்களுக்கும் மேலும் சகல
துறைகளிலும் எமக்கு உதவிகள் பல புரிந்த
உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.

திரு.திருமதி. பொ. ராஜகாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அன்பாக பேசுக

2. இனிமையாக பேசுக

3. உண்மையே பேசுக

4. நன்மையே பேசுக

5. மெதுவாக பேசுக

6. சிந்தித்துப் பேசுக

7. சமயமறிந்து பேசுக

8. சபையறிந்து பேசுக

9. பேசாதிருந்தும் பழகுக

*46 rue de Gergovie*
*75014 PARIS*
*Tél : 01 45 45 38 00*

*தமிழ் அச்சகம் பாரிஸ் : 33 1 42 09 60 64*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org